**MCOP NO. 49 /2021**
**Date 08.06.2026**
**Pw 1. கோவிந்தன்**
**2ம் எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு ஏற்பட்ட விபத்திற்கு இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். விபத்து ஏற்பட்ட சமயத்தில் ஆட்டோவில் நானும்,என்னுடன் வேறு 2 நபர்களும் இருந்தார்கள் என்றால் சரிதான். சங்கரன்கோவில் – புளியங்குடி செல்லும் சாலையில் இரயில்வே கேட்டின் மேல்புறம் உள்ள ரோட்டில் சாலை விதிகளை மதித்து மெதுவாகதான் ஆட்டோ சென்று கொண்டிருந்தது போதுதான் மேற்படி விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். ஆட்டோ ஓட்டுநரின் கவனக்குறைவால் எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். ஆட்டோவின் பின்னாக வந்த டிஎன்11 ஆர் 87 வெள்ளை கலர் டாடா இன்டிகா கலர் கார் வேகமாக வந்து நாங்கள் பயணம் செய்த ஆட்டோவை இடித்ததால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி வாகனம் ஆட்டோவிற்கு பின்னால் வந்து இடிக்காவிட்டால் இந்த விபத்து ஏற்பட்டு இருக்காது என்றால் சரிதான். மேற்படி விபத்திற்கு ஆட்டோவின் பின்னால் வந்த வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்த ஓட்டுநரின் கவனக்குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். 2ம் எதிர் மனுதார் அவருடைய வாகனத்தை சாலை விதிகளை மதித்து மெதுவாகவும், கவனமாகவும் தான் ஓட்டி வந்தார் என்றால் சரிதான். மேற்படி விபத்தானது 2ம் எதிர் மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்படாததால் எனக்கு நஷ்ட ஈடு கொடுக்க அவர் கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. விபத்து நடந்த சமயத்தில் 2ம் எதிர் மனுதாரர் வாகன காப்பீடு 4ம் எதிர் மனுதாரரின் நிறுவனத்தில் ஊர்ஜிதத்தில் இருந்ததால் மேற்படி விபத்திற்கு இழப்பீடு 4ம் எதிர் மனுதாரர் தான் வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. 2ம் எதிர் மனுதாரரைப் பொருத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**4ம் எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 2ம் எதிர் மனுதாரரின் ஆட்டோவில் விபத்து சமயத்தில் பயணம் செய்தேன் என்றால் சரிதான். நான் சங்கரன்கோவில் – புளியங்குடி செல்லும் ரோட்டில் மேற்காக சென்று கொண்டிருந்தேன் என்றால் சரிதான். எங்களுக்கு பின்னாக வந்த இண்டிகா கார் நாங்கள் பயணம் செய்த ஆட்டோவிற்கு பின்னால் வந்து இடித்துவிட்டது என்றால் சரிதான். மேற்படி கார் டிரைவர் மேல தான் வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால்

சரிதான். நான் தாக்கல்செய்த மனுவில் திருமலைச்சாமியும், அவர் காப்பீடு செய்த நிறுவனமும் ஒரு அவசிய கட்சி என்பதால் அவர்களை சேர்க்க வேண்டும் என்பதற்காகதான் சேர்த்தோம் என்றால் சரிதான்., மேற்படி விபத்தில் எனக்கு காயம் ஏற்பட்டதற்கு 1, 3 ம் எதிர் மனுதாரர்கள் எனக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்றால் சரிதான். 4 ம் எதிர் மனுதாரரைப் பொருத்து எந்தவித இழப்பீடும் கொடுக்க வேண்டியதில்லை என்றாலும், அவரைப்பொருத்து இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

3 ம் எதிர் மனுதாரரின் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/–P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.